In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 157/2021 | Prosecution witness P.W.11 |
| Name: Chellaiah | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 02-12-2024.

**(Accused are present.)**

முதல் விசாரணை :-

நான் காக்கையன்பட்டியில் வசிக்கிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். 11.01.2019 ம் தேதி அதிகாலை 3.30 மணியளவில் மாமரத்துப்பட்டிக்கு அருகே எலி வேட்டைக்கு போய்விட்டு நானும், கருப்பையாவும் வந்துகொண்டிருந்தோம். அப்போது வடமதுரை ஆய்வாளர் எங்களை கூப்பிட்டு எங்களை எங்கே போய்விட்டு வருகிறீர்கள் என்று கேட்டார். எலிவேட்டைக்கு போய் வருவதாக சொன்னோம். அப்போது அவர் ஒரு கொலை நடந்துவிட்டது என்று கூறி எங்கள் இருவரையும் அழைத்தார். நாங்கள் எலிவேட்டைக்கு செல்லும்போது நெற்றியில் கட்டும் லைட் கொண்டுபோய் இருந்தோம். அப்போது கரந்தன் என்பவர் வீட்டில் நாங்கள் கொண்டு சென்ற லைட் வெளிச்சத்தில் படம் வரைந்து அந்த இடத்தில் கிடந்த இரத்தம்பட்ட மண்ணையும், இரத்தம் படாத மண்ணையும் கைப்பற்றினார்கள். அவ்வாறு பார்வையிட்டதற்கும், கைப்பற்றியதற்கும் எங்களிடம் கையெழுத்து கேட்டார்கள். நாங்கள் போட்டோம். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசர் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். பார்வை மகசர் அதசாஆ.2. அத்தாட்சி அதசாஆ.3. என்னிடம் காண்பிக்கப்படும் இரத்தம்பட்ட மண், இரத்தம்படாத மண் சிறிதளவு ஆகியவற்றை அன்றைய தினம் கைப்பற்றப்பட்டதுதான். அவைகள் முறையே சாபொ.5, மற்றும் 6 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

காக்கையன்பட்டிக்கும் படம் வரைந்த இடத்திற்கும் இடையே சுமார் 15 கி.மீ. தொலைவு இருக்கும். எங்கள் ஊரில் இருந்து சம்பவம் நடந்த இடத்திற்கு வரவேண்டும் என்றால் பாலத்தோட்டம், கொண்ணையன்பட்டி, குருந்தம்பட்டி வழியாக மாமரத்துப்பட்டி செல்லவேண்டும். என்னுடன் சாட்சி கையெழுத்து போட்ட கருப்பையா பூசாரிபட்டியைச் சேர்ந்தவர். பூசாரிபட்டி மாமரத்துப்பட்டியிலிருந்து சுமார் 9.கி.மீ. தொலைவில் உள்ளது. நாங்கள் இருவரும் பிளாட்டினம் இருசக்கர வாகனத்தில் வந்தோம். நான் தான் பூசாரிபட்டி சென்று கருப்பையா கூட்டி வந்தேன். அப்போது இரவு 11 மணியிருக்கும். இரவு 11 மணியிலிருந்து 3.30 மணிவரை எங்கு இருந்தோம் என்றால் கரந்தன்மலை அருகே எலி வேட்டையில் இருந்தோம். அன்றைய தினம் 9 எலி பிடித்தோம். அதை இருசக்கர வாகனத்தில் வைத்திருந்தோம். வடமதுரை ஆய்வாளர் அவர்களை மாமரத்துப்பட்டிக்கு தெற்கே சுமார் 2.1/2 கி.மீ. தாண்டி பார்த்தோம். அந்த இடத்திலிருந்து படம் வரைந்த இடம் தெற்கே 500 மீட்டர் தாண்டி உள்ளது. அந்த இடத்தில் ஆய்வாளர் தவிர இரண்டு போலீசார் இருந்தார்கள். குரும்பபட்டியில் இருந்து கோபால் பட்டி செல்லும் ரோடு என்றால் சரிதான். அந்த ரோடு தென்வடல் ரோடு. அந்த ரோட்டில் படம் வரைந்த இடம் ரோட்டிற்கு எந்தப்பக்கம் என்றால் நான் அன்றைய தினம் சென்றதுதான். அதன் பிறகு அந்த இடத்திற்கு செல்லவில்லை. அதனால் ஞாபகமில்லை. தார்ரோட்டில் இருந்து படம் வரைந்த இடம் 500 மீட்டர் தாண்டி இருக்கும். கரந்தன் வீட்டின் முன்புறம்தான் படம் வரைந்தார்கள் என்றால் சரிதான். கரந்தன் வீட்டுக்கு சென்றபோது அதிகாலை 3.30 மணி என்பதால் அந்த இடம் இருட்டாக இருந்தது என்றும் நாங்கள் கொண்டு சென்ற லைட் வெளிச்சத்தை பயன்படுத்திதான் படம் வரைந்தார்கள் என்றால் சரியல்ல. போலீசாரும் லைட் கொண்டு வந்திருந்தார்கள். கரந்தன் வீட்டில் டாப் லைட் எரிந்து கொண்டிருந்தது. கரந்தன் வீடு என்பது சென்ட்ரிங் வீடா, கூரை வீடா, அஸ்பெஸ்டாஸ் வீடா என்றால் மாட்டுக்கு கொட்டகை போட்டிருந்தது. அந்த கொட்டகை எதனால் அமைந்தது என எனக்கு ஞாபகமில்லை. மேல்பகுதியில் லைட் எரிந்தது. கூரைப்பகுதிக்கு

மேலா, ஆஸ்பெஸ்டாஸ் பகுதிக்கு மேலா என்பது எனக்கு ஞாபகமில்லை. அன்றைய தினம் கரந்தன் வீட்டிற்கு மின் இணைப்பே கிடையாது என்றால் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் அத்தாட்சியை யார் எழுதினார்கள் என்றால் ஆய்வாளர் எழுதினார். கொலை நடந்த இடத்தில் நவரத்தினக்கல் எதுவும் போலீசார் கைப்பற்றினார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நானோ, கருப்பையாவோ சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களில் கையெழுத்து செய்தோம் என்றாலும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்கள் சொல்லிக்கொடுத்ததன்படி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சாபொ.5, 6 எங்கள் முன்னிலையில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.12.02 17:34:52 +0530

Principal District Judge,
Dindigul.